**INTERNATIONAL INDIAN SCHOOL,**
**DAMMAM MIDDLE SECTIONS (BMS/GMS)**
**ANNUAL EXAM - WORKSHEET 2024-25**

**CLASS: 8** **SUBJECT: TAMIL**

---

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

அது 1921 ஆம் ஆண்டு. மத்திய தரைக்கடலில், ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்க விடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார். ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் "இராமன் விளைவு" என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் "தேசிய அறிவியல் நாள்" எனக் கொண்டாடி மகிழ்கிறோம். அவர் யார் தெரியுமா? அவர் தான் சர்.சி.வி. இராமன்.

1. இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்?
2. இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?
3. தேசிய அறிவியல் நாள் என்றைக்குக் கொண்டாடப்படுகிறது? ஏன்?
4. யாருக்கு கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது?
5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக

## நானிலம் படைத்தவன்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **போர்க்களத்தில் வெளிப்படும் குணம்.** .........
   அ) மகிழ்ச்சி   ஆ) துன்பம்   இ) வீரம்   ஈ) அழுகை
2. **கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**.........
   அ) கல் + அடுத்து   ஆ) கல் + எடுத்து   இ) கல் + லடுத்து
   ஈ) கல் + லெடுத்து
3. **நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.**
   அ) நா + னிலம்   ஆ) நா + நிலம்   இ) நான் + நிலம்   ஈ) நான்கு + நிலம்

4. **நாடு + என்ற என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.**

அ) நாடென்ற ஆ) நாடன்ற இ) நாடு என்ற ஈ) தாடுஅன்ற

5. **கலம் + ஏறி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்..**

அ) கலம்ஏறி ஆ) கலமறி இ) கலன்ஏறி ஈ) கலமேறி

## சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. மாநிலம்
2. கடல்
3. பண்டங்கள்

## நயம் அறிக.

1. நானிலம் படைத்தவன் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எழுதுக.
2. நானிலம் படைத்தவன் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.

## குறுவினா

1. நான்கு நிலங்கள் என்பன யாவை?
2. தமிழன் எதற்கு அஞ்சினான்?
3. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?
4. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?

## பராபரக்கண்ணி

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம் உயிர் ஈ) தம்முஉயிர்

2. இன்புற்று + இருக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) இன்புற்றிருக்க ஆ)இன்புறுறிருக்க

இ) இன்புற்று இருக்க ஈ) இன்புறு இருக்க

3. 'தானென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) தானெ + என்று ஆ) தான் + என்று

இ) தா + னென்று ஈ) தான் + னென்று

4. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல்

அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்

<u>நயம் அறிக</u>

பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை, மோனைச் சொற்களை எழுதுக.

குறுவினா

1. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
2. இன்பநிலை எப்போது வந்து சேரும்?
3. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

## திருக்குறள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே ......... ஆகும்.

   அ) பகை ஆ). ஈகை இ) வறுமை ஈ) கொடுமை

2. பிற உயிர்களின் ........... க் கண்டு வருந்துவதே அறிவின் பயனாகும்.

   அ) மகிழ்வை ஆ) செல்வம் இ) துன்பத்தை ஈ) பகையை

3. உள்ளத்தில் .............. இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.

   அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு ஈ) குற்றம்

**இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.**

1. வறியார்க்கு ஒன்று ஈகைமற்று ஈவதே எல்லாம்
   குறியெதிர்ப்பை உடைத்து நீரது.
2. எனைத்தானும் யார்க்கும் எஞ்ஞான்றும் மனத்தானாம்
   மாணாசெய் தலை யாமை.

விடை தருக.

1. அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது எது ?
2. அறம் என்பது யாது ?
3. துன்பம் செய்தவரைத் தண்டிக்கும் வழியாக வள்ளுவர் கூறுவது யாது?

அடிமாறாமல் எழுதுக

1. ‘இன்னா’ எனத் தொடங்கும், ‘குறளையும்” தலை என முடியும் குறளையும் எழுதுக.

## வளர்தமிழ் <u>( உரைநடை )</u>

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தொன்மை’ என்னும் சொல்லின் பொருள் ...................

   அ) புதுமைஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

2. ‘இடப்புறம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................

   அ) இடன் + புறம் ஆ) இடது + புறம்
   இ) இட + புறம் ஈ) இடப் + புறம்

2. ”சீரிளமை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை

இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

3. சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .......

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்

இ) சிலம்புதிகாரம் ஈ) சிலபதிகாரம்.

4. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ்

இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

5. “தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடியவர்............

அ) கண்ண தாசன் ஆ) பாரதியார்

இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

6. ‘மா’ என்னும் சொல்லின் பொருள் ...........

அ) மாடம் ஆ) வானம்

இ) விலங்கு ஈ) அம்மா

கோடிட்ட இடத்தை நிரப்புக

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ...............
2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ............... .
3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது .......... அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

சொற்களைத் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக

1. தனிச்சிறப்பு .....................................
2. நாள்தோறும் .................................

குறுவினா

1. தமிழ்த்தாயின் தொன்மையை பாரதியார் எவ்வாறு கூறுகிறார்
2. பூவின் ஏழு நிலைகள் யாவை?
3. மா - என்னும் ஒரு சொல் தரும் பல பொருள்களை எழுதுக.
4. இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் உருவாகியிருக்கும் கலைச்சொற்களை எழுதுக.

சிறுவினா

1. தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால்?:
2. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?

## வளரும் வணிகம் ( உரைநடை )

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ...........
   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி
   இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி
2. வணிகம்+சாத்து என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) வணிகசாத்து ஆ)வணிகம்சாத்து
   இ) வணிகச்சாத்து ஈ) வணிகத்துசாத்து
3. பண்டம் + மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) பண்டமாற்று ஆ) பண்டம்மாற்று
   இ) பண்மாற்று ஈ) பண்டுமாற்று
4. மின்னணு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) மின் + னணு ஆ) மின்ன + அணு
   இ) மின்னல் + அணு ஈ) மின் + அணு
5. விரிவடைந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) விரி+வடைந்த ஆ) விரி+அடைந்த
   இ) விரிவு + அடைந்த ஈ) விரிவ்+அடைந்த

### பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக

1. வணிகம் .
2. ஏற்றுமதி .
3. சில்லறை
4. கப்பல்

விடை தருக

1. வணிகம் என்றால் என்ன?
2. வணிகச்சாத்து என்றால் என்ன?
3. சிறு வணிகப் பொருட்கள் யாவை?
4. சிறுவணிகம் எவ்வாறெல்லாம் நடைபெறும்?
5. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருட்கள் எவை?
6. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
7. பெருவணிகம் - குறிப்பு எழுதுக.

### ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை எழுதுக.

1. மின்னணு வணிகம்,
2. காசோலை,
3. இணையத்தள வணிகம்,
4. வரைவோலை,
5. மின்னணு மயம்
6. பற்று அட்டை
7. கடன் அட்டை
8. பணத்தாள்,

**ஒவ்வொரு ஊரிலும் கிடைக்கும் சிறப்புப் பொருள்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துக.**

1. மதுரை- மல்லி
2. திருநெல்வேலி- அல்வா
3. மணப்பாறை -முறுக்கு
4. காஞ்சிபுரம் -பட்டு
5. பொள்ளாச்சி - இளநீர்
6. திருப்பதி -லட்டு
7. திண்டுக்கல் -பூட்டு
8. சேலம் -மாம்பழம்
9. பழனி- பஞ்சாமிர்தம்
10. ஊட்டி- ரோஜா

<u>பசிப்பிணி போக்கிய பாவை ( உரைநடை )</u>

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு .........

   அ) இலங்கைத் தீவு    ஆ) இலட்சத் தீவு

   இ) மணிபல்லவத் தீவு    ஈ) மாலத் தீவு

2. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண்

   அ) சித்திரை    ஆ) ஆதிரை

   இ) காயசண்டிகை    ஈ) தீவதிலகை

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. செடிகொடிகள்
2. முழுநிலவு நாள்
3. அமுதசுரபி
4. நல்லறம்

விடையளிக்க

1. அமுதசுரபியின் சிறப்பு யாது?
2. 'கோமுகி" என்பதன் பொருள் யாது?
3. மணிமேகலை யார்? எந்த ஊரைச் சேர்ந்தவள்.?
4. மணிமேகலை அமுதசுரபியின் உதவியால் யாருக்கெல்லாம்
5. உணவளித்தாள்?
6. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?

# இலக்கணம்

## ஆகு பெயர்

அடைப்புக் குறிக்குள் கூறியவாறு செய்க.

1. ஊர் மக்கள் சிரித்தனர் (ஆகு பெயர் ஆக்குக)
2. வறுவல் தின்றான் (எவ்வகை ஆகு பெயர்)
3. நீல நிறமுடைய மலர்களைச் சூடினாள் (பண்பாகு பெயராக மாற்றுக)
4. ஊரே திரண்டு வந்தது (ஆகு பெயர் நீக்கி எழுதுக)

இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடு.

1. சித்திரை வந்தாள்
   அ) சினையாகு பெயர் ஆ) காலவாகு பெயர் இ) தொழிலாகு பெயர்
2. தலைக்கு ஒரு மாம்பழம் கொடு
   அ) சினையாகு பெயர் ஆ) காலவாகு பெயர் இ) தொழிலாகு பெயர்

நிரப்புக.

1. ஆகுபெயர் ……………………………………………………வகைப்படும்.
2. பொருளாகுபெயர் என்பது ……………………………………………ஆகும்.
3. பொங்கல் உண்போம் என்பது ……………………………………………
4. பண்பாகுபெயரின் மறுபெயர்…………………………………………………..
5. சினையின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது …………………
6. ஒரு இடத்தின் பெயர் சினைக்கு ஆகி வருவது……………………………..
7. ஊர் சிரித்தது - இத்தொடரில் ஊர் என்பது ……………………...க் குறிக்கும்.

## வேற்றுமை

எவ்வகை வேற்றுமை எனக் கூறுக.

1. வீட்டின் கண் பூனை
2. வலிக்கு வேலை
3. திருத்தணியின் வடக்கே வேங்கடம்
4. பாலின் நிறம் கொக்கு
5. நாரால் கயிறு திரித்தான்
6. ஆறுமுகனுடன் வள்ளிமயில் சென்றாள்
7. நாயொடு குட்டியும் சென்றது
8. இராமன் வந்தான்

சான்று தருக.

1. அழித்தல் பொருளில் வரும் இரண்டாம் வேற்றுமை
2. உடைமை பொருளில் வரும் இரண்டாம் வேற்றுமை
3. முறை பொருளில் வரும் நான்காம் வேற்றுமை
4. கொடை பொருளில் வரும் நான்காம் வேற்றுமை
5. ஏழாம் வேற்றுமை
6. எழுவாய் வேற்றுமை

## தொகைநிலை

இலக்கணக் குறிப்பு தருக.

1. வளர்பிறை
2. செம்மொழி
3. கயல்விழி

4. மா, பலா, வாழை
5. நாலிரண்டு
6. செய்தொழில்
7. புத்தகம் படித்தான்
8. வெற்றிலை பாக்கு
9. கருங்கண்
10. மதிமுகம்
11. பொற்றொடி வந்தாள்
12. வளர்புகழ்
13. திண்தோளன் வந்தான்

## தொகாநிலை

இலக்கணக் குறிப்பு தருக.

1. உடைந்த நாற்காலி
2. வந்து நின்றான்
3. கண்ணா வா!
4. வந்தான் இராமன்
5. மற்றுப்பிற
6. சாலப் பசித்தது
7. கூடிப் பேசினர்

நிரப்புக.

1. மரக்கிளை ..............................................---- என முறிந்தது.
2. தங்கம் ..............................................--------- என மின்னியது.
3. வா வா வா என்பது .............................................. ஆகும்.

## <u>புணர்ச்சி, உடம்படுமெய்</u>

நிரப்புக

1. நிலைமொழி ஈறு ஏ முன் உயிர்வரின் உடம்படுமெய்யாக------------------------ தோன்றும்.
2. பசுமை ------------------------ பைங்கூழ்
3. வட்டம் + பலகை------------------------------
4. வாழை + பழம் ------------------------------
5. பனி + துளி--------------------------
6. பூ + அழகு------------------------------
7. நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வதற்கு-----------------என்று பெயர்
8. நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாமல் புணர்வது--------------------
9. விகாரப்புணர்ச்சி--------------------------------------------------------------------------------------வகைப்படும்
10. அல் + திணை --------------------------------------------------------------------------------------என புணரும்.
11. தோன்றல். திரிதல், கெடுதல் என்பன--------------------------------------------புணர்ச்சி ஆகும்
12. உடம்படுமெய் என்பது--------------------------------------------------------------------------------ஆகும்.

சரியான சொற்றொடரை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இரண்டு அல்லது பல சொற்கள் இணைவதற்குப் வேற்றுமை என்று பெயர்
2. இரண்டு அல்லது பல சொற்கள் இணைவதற்குப் தொகா நிலை என்று பெயர்
3. இரண்டு அல்லது பல சொற்கள் இணைவதற்குப் ஆகுபெயர் என்று பெயர்
4. இரண்டு அல்லது பல சொற்கள் இணைவதற்குப் புணர்ச்சி என்று பெயர்

1. இ. ஈ. ஐ ஆகியன முன் உயிர் வரின் வ் தோன்றும்
2. இ. ஈ. ஐ ஆகியன முன் உயிர் வரின் த் தோன்றும்
3. இ. ஈ. ஐ ஆகியன முன் உயிர் வரின் ய் தோன்றும்
4. இ. ஈ. ஐ ஆகியன முன் உயிர் வரின் வ் ய் தோன்றும்

எழுதுதல்

1. நூலகம் அமைத்துத் தர வேண்டி நூலக இயக்குநருக்குக் கடிதம் எழுதுக

அல்லது

வெற்றிபெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

2. உழைப்பே முலதனம் - துணைப்பாட கட்டுரை.
3. சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக
4. மனப்பாட பாடல் பகுதி- திருக்குறள், பராபரக்கண்ணி

---

